# अश्वत्थ (नारायण) स्तोत्रम्

**मूलतो ब्रह्मरूपाय मध्यतो विष्णुरूपिणे। अग्रत: शिवरूपाय वृक्षराजाय ते नम:।।**

**आयु: प्रजां धनं धान्यं सौभाग्यं सर्वसम्पदम्। देहि देव महावृक्ष त्वामहं शरणं गत:।**

அஶ்வத்த (நாராயண) ஸ்தோத்ரம்

१. आयुर्बलं यशो वर्चः प्रजाः पशु वसूनि च ।
ब्रह्म प्रज्ञाञ्च मेधाञ्च त्वं नो देहि वनस्पते ॥

1. ஆயுர்பலம் யஶோ வர்ச்ச: ப்ரஜா: பஶு வஸூனி ச ।
ப்ரஹ்ம ப்ரக்ஞாம் ச மேதாம் ச த்வம் நோ தேஹிவனஸ்பதே ॥

விருக்ஷங்களுக்குத்தலைவனான ஓ அரசே ஆயுள் பலம் புகழ் சாந்தி குழந்தைகள் பசுக்கள் பொருள்கள் வேதம் புத்தி மேதை இவைகள் எங்களுக்கு நீ கொடுக்க வேண்டும்.

२. सततं वरुणो रक्षेत् त्वामारात् वृष्टिराश्रयेत् ।
परित स्त्वां निषेवन्तां तृणानि सुख मस्तु ते ॥

2. ஸததம் வருணோ ரக்ஷேத் த்வாமாராத் வ்ருஷ்டிராஶ்ரயேத் ।
பரிதஸ் த்வாம் நிஷேவந்தாம் த்ருணானி ஸுகமஸ்துதே ॥

வருணன் எப்பொழுதும் தங்களை நான்கு பக்கத்திலும் பாதுகாக்க வேண்டும். உமது ஸமீபத்தில் மழையிருக்கவேண்டும். தங்களுக்கு நான்கு பக்கத்திலும் புற்கள் இருக்கவேண்டும். தங்களுக்கு நன்மை உண்டாக்க வேண்டும்.

३. अक्षिस्पन्दं भुजस्पन्दं दुस्वप्नं दुर्विचिन्तनम् ।
शत्रूणाञ्च समुत्पन्नं ह्यश्वत्थ शमयस्व मे ॥

3. அக்ஷிஸ்பந்தம் புஜஸ்ஸ்பந்தம் துஸ்வப்நம் துர்விசிந்தனம் ।
ஶத்ரூணாம் ச ஸமுத்பந்நம் ஹ்யஸ்வத்த ஸமயஸ்வ மே ॥

ஏ அரசே கண் வியாதி கை நடுக்கம் கெட்டக்கனவு கெட்ட நினைவு சத்ருபயம் இவைகளை போக்க வேண்டும்.

४. अश्वत्थाय चरेण्याय सर्वैश्वर्य प्रदायिने ।
नमो दुस्वप्न नाशाय सुस्वप्न फल दायिने ॥

4. அஶ்வத்தாய சரேண்யாய ஸர்வைஶ்வர்ய ப்ரதாயினே ।
நமோ துஸ்வப்ந நாஶாய ஸுஸ்வப்ந பல தாயிநே ॥

சிறந்தவரும் அனைத்து செல்வத்தையும் கொடுக்கிறவரும் கெட்ட ஸ்வப்னத்தைப் போக்கி நல்ல கனவைத் தருபவருமான ஓ அச்வத்தமே தங்களுக்கு நமஸ்காரம்

५. मूलतो ब्रह्मरूपाय मथ्यतो विष्णुरूपिणे ।
अग्रतः शिव रूपाय वृक्षराजाय ते नमः ॥

5. மூலதோ ப்ரஹ்ம ரூபாய மத்யதோ விஷ்ணு ரூபிணே ।
அக்ரத சிவ ரூபாய வ்ருக்ஷ ராஜாய தே நம ॥

அடியில் ப்ரம்ஹாவாகவும், நடுவில் விஷ்ணுவாகவும் நுனியில் சிவனாவும் இருக்கின்றவரும் மரங்களுக்கு அரசனுமான தங்களுக்கு நமஸ்காரம்.

६. अश्वत्थ सर्वपापानि शत जन्माऽर्जितानि च ।
नुदस्य मम वृक्षेन्द्र सर्वैश्वर्य प्रदो भव ॥

6. அஸ்வத்த ஸர்வ பாபானி ஶத ஜன்மார்ஜிதானி ச ।

நுதஸ்வ மம வ்ருக்ஷேந்தர ஸர்வைஸ்வர்ய ப்ரதோ பவ ॥

ஹே அஸ்வத்தமே நூற்றுக்கணக்கான ஜன்மாக்களின் ஸம்பாதிக்கப்பட்ட என்னுடைய அனைத்து பாபங்களையும் போக்க வேண்டும் ஓ மரங்களுக்கு அரசனே அனைத்து ஐஸ்வர்யங்களையும் எனக்குக் கொடுக்க வேண்டும்.

७. यं दृष्ट्वाव मुच्यते रोगैः स्पृष्ट्वा पापैः प्रमुच्यते ।
यदोऽऽन्नयात् चिरञ्जीवी तमश्वत्थं नमाम्यहम् ॥

7. யம் த்ருஷ்ட்வா முச்யதே ரோகை:
ஸ்ப்ருஷ்ட்வா பாபை: ப்ரமுச்யதே ।
யதோந்நயாத் சிரஞ்ஜீவீ
தமஸ்வத்தம் நமாம்யஹம் ॥

எந்த அரசமரத்தைக் காண்பதாலேயே வ்யாதிகள் போய் விடுமோ தொட்டாலே பாபங்கள் விளகுமோ எதை நெருங்கியிருப்பதால் வெகுகாலம் ஜீவத்திருப்பானோ அப்படிப்பட்ட அரச மரத்தை நான் நமஸ்காரம் செய்கிறேன்.

८. अश्वत्थ सुमहाभाग सुभग प्रियदर्शन ।
इष्ट कामांश्च मे देहि सत्रुभ्यश्च अपराभवम् ॥

8. அஸ்வத்த ஸுமஹாபாக ஸுபக ப்ரியதர்ஶன ।
இஷ்ட காமாம்ஸ் ச மே தேஹி ஶத்ருப்யஸ்ச அபராபவம் ॥

நல்ல பாக்யசாலியும் நல்ல உருவமுள்ளவனுமான ஓ அரசே எனக்கு இஷ்ட ஸித்திகளைக்கொடுக்கவேண்டும். தீயவர்களிடமிருந்து வெற்றியையும் தரவேண்டும்.

९. आयुः प्रजां धनं धान्यं सौभाग्यं सर्व सम्पदम् ।
देहि देव महा वृक्ष त्वामहं शरणं गतः ॥

9. ஆயு: ப்ரஜாம் தனம் தான்யம்
ஸௌபாக்யம் ஸர்வ ஸம்பதம் ।
தேஹி தேவ மஹாவ்ருக்ஷ
த்வாமஹம் ஶரணம் கத: ॥

நீண்ட ஆயுள் நல்ல மகன் பொருள் தான்யம் அழகு ஸர்வ ஸம்பத்து முதலியவைகளைத் தர வேண்டும். தேவனான ஓ அரசே உன்னைச் சரணமடைந்தேன்.

१०. ऋग्यजुस्साम मन्त्रात्मा सर्वरूपी परात्परः ।
अश्वत्थो वेद मूलोऽसौ ऋषिभिः प्रोच्यते सदा ॥

10. ருக் யஜுஸ் ஸாம மந்த்ராத்மா ஸர்வரூபீ பராத்பர: ।

அஸ்அனைத்துப் பொருளின் வடிவமாகவும் வேதத்திற்குக் காரணமாயும் அரச மரமானது ரிஷிகளால் எப்பொழுதும் கொண்டாடப்படுகிறது.

११. ब्रह्महा गुरुहा चैव दरिद्रो व्याधि पीडितः ।
आवृत्य लक्ष सङ्ख्यं तत् स्तोत्र मेतत् सुखी भवेत् ॥

11. ப்ரஹ்மஹா குருஹா சைவ தரித்ரோ வ்யாதி பீடித: ।
ஆவ்ருத்ய லக்ஷஸங்க்யம் தத் ஸ்தோத்ர மேதத் ஸுகீபவேத்॥

ப்ரம்ஹத்தி செய்தவனோ குருஹத்தி செய்தவனோ, தரித்ரனோ வ்யாதியினால் பீடிக்கப்பட்டவனோ, லக்ஷம் எண்ணிக்கையில் அரச மரத்தை ப்ரதக்ஷிணம் செய்து கொண்டு இதை ஜபித்தால் அனைத்து நன்மையையும் அடைவான்

---

# ஆயிரம் பலன் தரும் அபூர்வ அரசமரம்

அரச மரம் இருக்கும் இடத்தில் மும்மூர்த்திகள் வாசம் செய்வதாக நம்பப்படுகிறது. அரச மரத்தின் அடிப்பக்கம் பிரம்மா, நடுமரம் விஷ்ணு, கிளைகள் கொண்ட மேற்பாகம் சிவன் என்பர். இம்மரம் மகாவிஷ்ணுவின் வலது கண்ணிலிருந்து தோன்றியது. எனவே இந்த மரத்தை எக்காரணத்தைக் கொண்டும் வெட்டுவதும், அதன்மேல் ஏறுவதும், கிளைகளை ஒடிப்பதும் தகாத செயல்கள் ஆகும். அரச மரத்திற்கு "அஸ்வத்தா' என்ற பெயரும் உண்டு. அஸ்வத்தா என்றால்,"வழிபடுபவர்களின் பாவத்தை மறு நாளே தீர்ப்பது' என்று பொருள். இந்த அரச மரத்தை திங்கட்கிழமையில் வரும் அமாவாசையன்று விரதம் கடைப்பிடித்து வழிபட்டால் வாழ்வில் வசந்த ராகம் பாடும்; வளமான வாழ்வு கிட்டும். காலை வேளையில் குழந்தை பாக்கியம் இல்லாத தம்பதிகள் நூற்றியெட்டு முறை வலம்வந்து வணங்கினால் குழந்தை பாக்கியம் கிட்டும். மழலைச்செல்வம் கேட்க அரசமர வழிபாடு போல் வேறு எதுவும் இல்லை.

அரசமர நிழல்படுகின்ற நீர்நிலைகளில் வியாழக்கிழமை அன்றும் அமாவாசை அன்றும் நீராடுவது திரிவேணி சங்கமத்தில் நீராடுவதற்குச் சமம்.

சோமவார அமாவாசை என்றாலே நம்முன் அரசமரம் தோன்றும். இந்த நன்நாளில் அரசமரத்தை 108 பிரதக்ஷணம் செய்ய வேண்டும். ஒவ்வொரு பிரதக்ஷண முடிவில் ஒரு பழமோ இனிப்போ சமர்ப்பிக்க வேண்டும். பிறகு பூஜை முடிந்தவுடன் தூப தீபம் காட்டி பூஜை செய்து வைத்தவருக்கும் நம்மால் முடிந்தவரை தக்ஷிணை கொடுக்க வேண்டும். இதுபோல் சோமவார அமாவாசை விரதம் மூன்றாண்டுகளாவது செய்ய கைமேல் பலன் கிடைக்கும். பித்ருக்களை வழிபட்டு அவர்கள் ஆசி பெற சோமவார அமாவாசை மிகச்சிறந்த ஒரு நாள். வடநாட்டில் அரசமரத்தை வெள்ளை நூலினல் 108 சுற்று சுற்றி வருவார்கள்

"ஆயுர்விருத்தி பகவத் தஸ்யவர்த்தந தேஸர்வ ஸம்பத்' என்று பத்ம புராணம்சொல்கிறது. அரச மரத்தைப் பார்த்ததும் வணங்கியவருக்கு ஆயுள் வளரும்; செல்வ வளம் பெருகும். கோவில்களில் உள்ள அரச மரத்திற்கு இன்னும் அதிகமான சக்தி உண்டு. இந்த அரச மரத்தடியில் விநாயகப் பெருமான் எழுந்தருளியிருப்பார். அத்துடன் நாகர் சிலைகளும் அங்கு இருக்கும். இதனால் இது தோஷ நிவர்த்தி மரமாகவும் கருதப்படுகிறது.

அரச மரத்தை காலை வேளையில் ஏழு மணிக்கு முன் வலம் வருவது சிறப்பு.

சனிக்கிழமை தவிர மற்ற நாட்களில் மரத்தைத் தொடக்கூடாது.சனிக்கிழமையன்று அரச மரத்தடியில் ஸ்ரீலட்சுமி வாசம் செய்வதாக ஐதீகம்.

அரச மரத்தைச் சுற்றும்போது கீழ்க்கண்ட சுலோகத்தைச் சொல்லிக்கொண்டே வலம் வந்தால் கூடுதல் பலன் கிட்டும்.

"மூலதோ ப்ரும்மரூபாய

மத்யதோ விஷ்ணு ரூபிணே

அக்ரத் சிவரூபாய

வ்ருக்ஷ ராஜாயதே நம!'

இம்மரத்திலிருந்து 30 மீட்டருக்குள் எந்த ஒரு கோவில் இருந்தாலும், அந்தக் கோவிலில் மனஅமைதி இருக்கும். மனஅமைதி கொடுப்பதிலும் ரத்த ஓட்டத்தைச்சீர்செய்வதிலும் அரசமரம் முதன்மையான இடத்தை வகிக்கிறது. புத்தருக்கு ஞானம்பிறந்த போதி மரம், அரசமரம்தான்.

விஞ்ஞான ஆய்வின்படி ஒரு அரசமரம் நாளொன்றுக்கு 1800 கிலோ கரியமில வாயுவை உட்கொண்டு, 2400 கிலோ பிராண வாயுவை வெளியிடுகிறது. அரசமர சமித்துகளை மந்திரப்பூர்வமாக ஹோமத் தீயிலிட்டு, அந்த ஹோமப் புகை வீட்டில் பரவினால் கண்களுக்குத் தெரியாத பூச்சிகள், கிருமிகள் அழிந்துவிடும்.

இப்படி ஆயிரக்கணக்கான பலன்களை அள்ளித்தரும் அரச மரத்தை உரிய முறையில் தொடர்ந்து வழிபட்டு வந்தால், குழந்தைச் செல்வம் உள்ளிட்ட பல பாக்கியங்களையும் பெற்று நீடுழி வாழ்வர்.

---

## அரச மரத்தில் பாசிடிவ் எனர்ஜி அளிக்கக்கூடிய ஆற்றல் உள்ளது.அரச மரத்தைச் சுற்றினால்

அறிவு வளரும்.மரத்தினடியில் அமர்ந்தால் மனம் தெளிவடையும்.அங்கு ஜெபம் செய்தலோ ,தெய்வ சம்பந்தமான ஸ்தோத்திரம் பாராயணம் செய்தலோ நிறைய பலனை அடையலாம்.

அகிம்சையை போதித்த புத்தர் இந்த அரசமரத்தடியில் அமர்ந்து ,தவம் செய்து ஞானியாக ஆனார்.



கண்ணபிரான் கீதையில் 'மரங்களுக்குள் நான் அரச மரமாக இருக்கிறேன் 'எனகிறார்.



அரச மரத்தின் அடிப்பகுதியில் பிரம்மாவும், நடுப்பகுதியில் மகா விஷ்ணுவும்,நுனிப் பகுதியில் பரமசிவனும் வாசம் செய்கிறார்கள் ஆகவே மும்மூர்த்திகளின் சொரூபமாக அரசமரம் திகழ்கிறது. அதனால்தான் அரசமரத்திற்கு பூஜை செய்வது,பிரதட்சணம் செய்வது ,துன்பத்திற்கு காரணமான பாவங்களை போக்கி நல்ல அறிவை பெற்று தரும் என்று சாஸ்திரங்கள் கூறுகின்றன .

எந்த நேரத்தில் அரச மரத்தைச் சுற்றலாம் ?

சூரியன் உதயமாகும் நேரம் முதல் காலை 10.40 மணி வரையிலும் ,சூரியனின் கிரணங்கள் அரச மரத்தில் விழுவதால்,அப்பொழுது அதிலிருந்து வெளிவரும் காற்று நமக்கு ,நமது உடலுக்கு நன்மையை தரும்.ஆகவே காலை 10.40 மணிக்குள் அரச மரத்திற்கு பூஜை,நமஸ்காரம் செய்வது நல்லது.

மற்ற நாட்களை விட சனிக்கிழமை ,காலை வேளையில் அரச மரத்திலிருந்து வெளிவரும் சக்தி அதிகமாக இருப்பதால் சனிக் கிழமையே வலம் வருவது நன்மைப்பயக்கும் .அரச மரத்தை 7 முறை சுற்றி வர வேண்டும்.

குழந்தைப் பாக்கியம் இல்லாத தோஷத்தை போக்கி ,குழந்தைப் பாக்கியம் தர இந்த வழிபாடு மிகவும் சுலபமானது.

அரச மரத்தைச் சுற்றி விட்டு அடிவயிற்றை தொட்டு பார்த்தாளாம் என்பது

பழமொழி.அரசமரத்தை காற்று கர்ப்பத்தையே பலப்படுத்தக் கூடியது.

நோயால் பாதிக்கப்பட்டவர்கள் ஒவ்வொரு சனிக் கிழமை காலை சுமார் 8.20 மணிக்குள் அரச மரத்தை பக்தியுடன் 12,54,108 முறை வலம் வர வேண்டும்.தீராத நோய் தீரும்.

சனிக்கிழமை மட்டுமே அரசமரத்தை தொட்டு வணங்க வேண்டும்.மற்ற நாட்களில் அரச மரத்தை கையால் தொடக் கூடாது.

அரச மரத்தைச் சுற்றும் போது சொல்ல வேண்டிய ஸ்லோகம்

மூலதோபிரம்மரூபாயமத்யதோ
விஷ்ணுரூபினே அக்ரதச்சிவரூபாய
வ்ருக்ஷராஜாய தே நம:

அரசமரத்தின் சக்தி பெரியது .அத்துடன் நம் ஆனை முக விநாயகரை வழிபட்டால் நாம் செய்யும் காரியங்கள் அனைத்தும் வெற்றியைத்

தேடி தரும் .எனவேதான் நம் முன்னோர்கள் அரசமரத்துடன் விநாயகரையும் வைத்து வழிபட்டனர். நம் முன்னோர்கள் எதை செய்தாலும் அதில் அர்த்தம் இருக்கிறது என்பதை இதன் மூலம் அறியலாம்.

அமாவாசை திதியும்,திங்கட் கிழமையும் இணைத்து வரும் நாள் அமாசோமாவரம் என்று பெயர்.இந்த அற்புத நாளில் அரச மரத்தை வணங்கி நலம் பெறுவோம்.

தினம் தோறும் அரசமரத்தை சுற்றுவது நன்று.எந்தெந்த கிழமைகளில் சுற்ற என்ன பலன் கிடைக்கும் என்பதைப் பற்றி பார்ப்போம்.

திங்கள் ------மங்களம் உண்டாகும்

செவ்வாய் ----- தோஷங்கள் விலகும்

புதன் -------வியாபாரம் பெருகும்

வியாழன் -----கல்வி வளரும்

வெள்ளி ----சகல சௌபாக்கியம் கிடைக்கும்

சனி -------கஷ்டங்கள் விலகி லக்ஷ்மியின் அருள் கிடைக்கும்

அஸ்ட்ரோ சுந்தரராஜன் சென்னை: பண்டைய காலத்தில் இருந்தே நம் முன்னோர்கள் மரங்களை தெய்வமாக வழிபட்டனர். இந்துக்களின் வழிபாட்டில் வேம்பு, ஆல், அரசு என பல மரங்களுக்கு முக்கிய இடமுண்டு. அனைத்து மரங்களையும் விட அரசமரத்திற்கு தன் சிறப்பு அதிகம். அரசமர பிரதக்ஷிணம் செய்தால் புத்திர தோஷம் நீங்கும் என்பது நம்பிக்கை. ஸ்ரீ விளம்பி வருஷத்தின் சித்திரை மாதத்தில் திங்கள் கிழமையில் ஸோமவார அமாவாசையாக வந்தது சிறப்பம்சம். திருமணத்தடையுள்ளவர்களும் புத்திர தோஷம் உள்ளவர்களும், கல்விதடையுள்ளவர்களும், தீராத கடன் உள்ளவர்களும் அரசமர பிரதக்ஷிணம் செய்தால் கைமேல் பலன் கிடைக்கும் என ஜோதிட சாஸ்திரம் கூறுகிறது. தெய்வ வடிவங்களாகக் கருதப்படும் பலவகைமரங்களுள் அரசமரம் முதன்மையானது. மரங்களின் அரசன் என்று போற்றப்படுவது, அரச மரமாகும். இதில் மும்மூர்த்திகளும் வாசம் செய்வதாக புராணங்கள் தெரிவிக்கின்றன. தேவலோகத்து மரம் என்றும் அரச மரத்தை வர்ணிப்பார்கள். பிரம்மாவின் சக்தி இம்மரத்தில் இருப்பதால் அரசமரக்காற்றை நாம் சுவாசித்தால் ஆயுளும் வளரும். ஆரோக்கியம் சீராகும். புத்திர பாக்கியம் கிடைக்கும். அரசமர இலைகளின் சலசலப்பு ஆலய மணிபோல இருக்கும். அரசமரத்தடியில் விநாயகப் பெருமானையும், நாகராஜனையும் வைத்து வழிபடுவது வழக்கம். இவர்களை வழிபட்டால் காரியத்தடைகள் அகலும். கனிவான வாழ்க்கை அமையும். ராஜவிருட்சம் அரசமரத்தின் வேர் பகுதியில் பிரம்மனும், நடுவில் திருமாலும், உச்சியில் ஈசனும் அருள்புரிவதாக புராணங்கள் தெரிவிக்கின்றன அதனாலேயே அரசமரம் ராஜ விருட்சம் என்று அழைக்கப்படுகிறது. 'மரங்களில் நான் அரசமரமாக இருக்கிறேன்" என்று கீதையில் கண்ணன் கூறியிருக்கிறான். புராதான காலம் தொட்டே அரச மரம் இந்தியாவில் இருந்து வந்துள்ளது. இதன் பூர்வீகம் இந்தியாதான் என்பதற்கு சான்றுகள் உள்ளன. அரசமரம் இந்துக்களுக்கும், பௌத்தர்களுக்கும் புனித மரமாகும். புத்தபிரான் போதி மரத்தின் கீழ் ஞானம் பெற்றதாக நாம் அறிவோம். அந்த போதிமரம் என்பது அரச மரம்தான். அரசு நீழலிருந்தோன் என சூடாமணி நிகண்டு கடவுட் பெயர் தொகுதியில் குறிப்பிடப்பட்டுள்ளது. நீண்டு நெடிய மரம், அழகான இலைகள் என்று பரந்து விரிந்து காணப்படும் மரங்களிலேயே அரசமரம்தான் மிகவும் உணர்வுபூர்வமானதும் மிக புத்திசாலியான மரமும் கூட. அந்த மரத்தில் மற்ற மரங்களில் இல்லாத ஒருவகையான அமிலம் சுரக்கிறது. அந்த அமிலம் புத்திசாலித்தனம் வளர மிக அத்தியாவசியமான ஒன்று என்பதை மிக சமீபத்தில்தான் விஞ்ஞானிகள் கண்டறிந்துள்ளனர் என்பதை அறிந்தால் அனைவரும் வியப்படையக்கூடும். புத்தர் அந்த மரத்தின் கீழ் ஞானம் பெற்றது ஒரு தற்செயலான செயல் அல்ல! விஞ்ஞான உண்மை: அரசமரத்தை சுற்றினால் குழந்தை பேறுகிடைக்கும் என்பது என்பது ஒரு நம்பிக்கை. இதன் காரணமாகவே "அரசினை நம்பி புருசனை கைவிட்டாள்" என்ற பழமொழி வழக்கத்தில் உள்ளது. இது அறிவியல் பூர்வமாக நிரூபிக்கப்பட்டுள்ளளது. அரசமரம் வெளியிடும் காற்றில் பெண்களின் மாதச்சுழற்சி மற்றும் அது சம்பந்தமான சுரப்பிகள் சீரடைகின்றன என்று நிரூபிக்கப்பட்டுள்ளது 'அரச மரத்தை சுற்றிவிட்டு அடிவயிற்றைத் தொட்டுப்பார்த்தாள் "என்ற பழமொழி உண்டு. இதன் பொருள் அரச

மரம் குலம் தழைக்கச் செய்யும் பிள்ளைப் பேற்றை உண்டாக்கும். சூலகத்தை சீராக்கும். சூலகத்தில் உண்டான நோய்களை போக்கும் என்பதே. அரச மரத்தின் காற்று கருப்பை கோளாறுகளை போக்கும் தன்மையுடையது. அதுபோல் மூளையின் செயல்பாடுகளை தூண்டி, மன அமைதியைக் கொடுக்கும் குணமும் இதற்கு உண்டு. கருப்பை கோளாறு அரசமரத்தின் பட்டை, வேர், விதை இவற்றை பாலில் கொதிக்கவைத்து ஆறிய பின் அதில் தேன் கலந்து தொடர்ந்து 48 நாட்கள் ( 1 மண்டலம் ) அருந்தி வந்தால் தாது விருத்தியடையும். பெண்களுக்கு கருப்பைக் கோளாறுகள் நீங்கும். அரச மரத்தின் இலையை, பட்டை, வேர், விதை இவற்றை இடித்துபொடியாக்கி வைத்துக்கொண்டு மாதவிலக்குக் காலங்களில் கஷாயம் செய்து அருந்தி வந்தால் மாதவிலக்கில் ஏற்படும் பிரச்சனைகள் தீரும். கருப்பைக் கோளாறுகள் நீங்கும். ஜோதிடத்தில் அரசமரம் ஜோதிடத்தில் தெய்வாம்சம் எனும் இடங்களில் எல்லாம் குருவை குறிப்பிடுகின்றோம். தெய்வாம்சம் பொருந்திய ஞானம் தரும் மரங்களை குருவின் அம்சமாகவே போற்றப்படுகிறது. இம்மரத்தின் குச்சிகளை ஹோமங்களுக்கு குருவிற்கான சமித்தாக பயன்படுத்துகிறோம் என்பது குறிப்பிடத்தக்கது. பாலுள்ள மரங்களை சுக்கிரன் மற்றும் சந்திரனின் அம்சம் கொண்டதாக பாரம்பரிய ஜோதிட நூல்கள் கூறுகின்றன. மேலும் அரசமரத்தின் மருந்துவ குணங்களும் சுக்கிரனின் காரகத்தை கொண்டதாகவே அமைந்திருக்கிறது. மிகப்பெரிய உருவமுள்ள மரங்களை சனைஸ்வர பகவானின் அம்சமாக குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும் விருக்ஷ சாஸ்த்திரத்தில் அரச மரத்தை பூச நட்சத்திர விருக்ஷமாக கூறப்பட்டுள்ளது. பூச நட்சத்திரம் சனைச்சர பகவான் ஆதிக்கம் பெற்ற நட்சத்திரமாகும். பூச நட்சத்திரத்தின் அதிதேவதையாக தேவர்களின் குருவாகக்கொள்ளப்படும் பிரகஸ்பதி (குரு பகவான்) பழம்பெரும் ஜோதிட நூலான நட்சத்திர சிந்தாமனியில் விவரிக்கப்பட்டுள்ளது. பூச நட்சத்திரத்தில் பிறந்தவர்களும் அரச மரத்தின் அடியில் அமருபவர்களுக்கும் சனைச்வரன் அருளோடு குருவருளும் இணைந்து கிடைப்பதால் தான் ஆன்மீகத்தில் சிறந்து விளங்குகிறார்கள். இதுவே போதிமரத்தின் அறிவியல் மற்றும் ஆன்மீக ரகசியமாகும். அரச மரத்தின் அடியில் பல பஞ்சாயத்துக்கள் மற்றும் வழக்குகள் தீர்க்கப்படுவதை கிராமங்களில் பார்க்கலாம். குரு மற்றும் சனைச்சரனின் ஆதிக்கம் பெற்றவர்கள் சிறந்த நீதிமான்களாக விளங்குவதை காணலாம். ஒருவருக்கு திருமண பாக்கியம் மற்றும் குழந்தை பாக்கியம் இரண்டிற்க்கும் குருவின் அருளோடு சுக்கிரன் மற்றும் சனைஸ்வரரின் அருளும் வேண்டும். குரு,சுக்கிரன் சனி சேர்க்கை ஏழாமதிபதியோடு அமையும்போது திருமண பாக்கியமும் ஐந்தாம்/ஒன்பது அதிபதியோடு ஏற்படும்போது குழந்தை பாக்கியமும் ஏற்படுகிறது. சுக்கிரன், சிற்றின்பத்தில் நாட்டம் கொள்ளச் செய்பவர். திகட்டாத தாம்பத்யத்தையும் ஈர்ப்பு சக்தியையும் தரக்கூடியவர் ஆண்களின் சுக்கிலத்திற்கும் பெண்களின் சுரோணிதத்திற்கும் இவரே காரகம் வகிக்கிறார். ஒரு தம்பதியின் ஜாதகங்களில் குரு, சுக்கிரன் மற்றும் செவ்வாய் நல்ல வலிமையுடன் ஆட்சி, உச்சம், கேந்திரம், திரிகோணம் பெற்று நல்ல அம்சத்தில் இருந்தால் விரும்பிய புத்திர யோகம் தானாக கூடிவரும். அரச மரத்தில் அக்னிபகவான் ஒளிந்திருப்பதாகவும் சூரியனின் குதிரையின் அம்சமாகவும் புராணங்களில்

கூறப்பட்டுள்ளதால் இதன் மருத்துவ குணங்கள் ஆண்களுக்கு ஆண்மையை பெருக்கி குதிரையின் சக்தியை அளிக்கிறது. சனைஸ்வர பகவானால் ஏற்படும் புத்திர தோஷம் , திருமண தடை போன்றவற்றிற்க்கு அரசமர பிரதக்ஷிணம் சிறந்த பயணளிக்கும் பரிகாரமாகும். "குரு கொடுத்தால் சனி தடுப்பார். சனி கொடுத்தால் எவர் தடுப்பார்" என்பது ஜோதிட பழமொழி. சனி தசை, சனி புத்தி, ஏழரை சனி, அஷ்டம சனி, அர்தாஷ்டம சனி போன்ற காலங்களில் கல்வி பயிலும் குழந்தைகளுக்கு கற்பதில் மந்தம், கல்வித்தடை ஆகியை விலக அரசமர பிரதக்ஷிணம் மிக சிறந்த எளிமையான பரிகாரமாகும்.மேலும் அரசமரத்தடியில் அமர்ந்து படிப்பதும் கல்வியும் ஞானமும் வளர வழிவகுக்கும். அந்த காலத்தில் குருகுல கல்விமுறையில் அரசமரத்தடியில் குருமார்கள் கல்வி கற்பித்தது குறிப்பிடத்தக்கது. இம்மரத்தைச் சுற்றி வந்தால் பிரம்மா, விஷ்ணு, சிவன் ஆகிய மூவரின் அருளும் நமக்கு கிடைக்கும். சூரியனின் தேரிலுள்ள ஏழு குதிரைகளின் அம்சமாக அரசமரம் பூமியில் தோன்றியதென்பர். எனவே இம்மரத்தை எப்போதும் ஏழு முறைவலம்வரவேண்டும். உதயகாலத்தில் பூஜிப்பதும் முக்கியம். ஒவ்வொரு கடவுளுக்கும் ஒவ்வொருமரத்தை குறிப்பிட்டிருப்பினும், அனைத்து தெய்வங்களுக்கும் விருப்பமானது அரசமரம் ஒன்றே. இம்மரத்தின் அடிப்பகுதியில் பிரம்மாவும், நடுப்பகுதியில் மகாவிஷ்ணுவும்,மேல்பகுதியில் சிவனும் நித்ய வாசம்செய்வதாகக் கூறப்படுகிறது. "மூலதோ பிரம்ஹரூபாய மத்யதோ விஷ்ணு ரூபிணே| ஆக்ரத: சிவரூபாய விருக்ஷராஜாய தே நம|| என்னும் மந்திரம் கூறி அரசமரத்தை வணங்கவேண்டும்.திருமணத்தடை நீங்கி குழந்தைபேறு, மகிழ்ச்சியான வாழ்க்கை மூன்றுமே அமாவாசையில் அரசமரத்தை சுற்றுவதால் கிடைக்கும் என்பது நிதர்ஸனம். அரச மரத்தை செவ்வாய் மற்றும் வெள்ளிக்கிழமையிலும் மற்ற நாட்களில் சூரியோதயத்திலிருந்து இரண்டுமணிநேரத்திற்கு மேலும் சுற்ற கூடாது என வேத சாஸ்திர நூல்கள் குறிப்பிடுகின்றன.

Read more at: https://tamil.oneindia.com/astrology/news/worship-pipal-tree-is-an-important-rituals-somvati-amavasya1/articlecontent-pf304994-317443.html

॥ अश्वत्थस्तोत्रम् ॥

श्री नारद उवाच
अनायासेन लोकोऽयम् सर्वान् कामानवाप्नुयात् ।
सर्वदेवात्मकं चैकं तन्मे ब्रूहि पितामह ॥

ब्रह्मोवाच
श्रुणु देव मुनेऽश्वत्थं शुद्धं सर्वात्मकं तरुम् ।
यत्प्रदक्षिणतो लोकः सर्वान् कामान् समश्नुते ॥

अश्वत्थाद्दक्षिणे रुद्रः पश्चिमे विष्णुरास्थितः ।
ब्रह्मा चोत्तरदेशस्थः पूर्वेत्विन्द्रादिदेवताः ॥

स्कन्धोपस्कन्धपत्रेषु गोविप्रमुनयस्तथा ।
मूलं वेदाः पयो यज्ञाः संस्थिता मुनिपुङ्गव ॥

पूर्वादिदिक्षु संयाता नदीनदसरोऽब्धयः ।
तस्मात् सर्वप्रयत्नेन ह्यश्वत्थं संश्रयेद्बुधः ॥

त्वं क्षीर्यफलकश्चैव शीतलस्य वनस्पते ।
त्वामाराध्य नरो विन्द्यादैहिकामुष्मिकं फलम् ॥

चलद्दलाय वृक्षाय सर्वदाश्रितविष्णवे ।
बोधिसत्वाय देवाय ह्यश्वत्थाय नमो नमः ॥

अश्वत्थ यस्मात् त्वयि वृक्षराज नारायणस्तिष्ठति सर्वकाले ।
अथः श्रुतस्त्वं सततं तरूणां धन्योऽसि चारिष्टविनाशकोऽसि ॥

क्षीरदस्त्वं च येनेह येन श्रीस्त्वां निषेवते ।
सत्येन तेन वृक्षेन्द्र मामपि श्रीर्निषेवताम् ॥

एकादशात्मरुद्रोऽसि वसुनाथशिरोमणिः ।
नारायणोऽसि देवानां वृक्षराजोऽसि पिप्पल ॥

अग्निगर्भः शमीगर्भो देवगर्भः प्रजापतिः ।
हिरण्यगर्भो भूगर्भो यज्ञगर्भो नमोऽस्तु ते ॥

आयुर्बलं यशो वर्चः प्रजाः पशुवसूनि च ।
ब्रह्म प्रज्ञां च मेधां च त्वं नो देहि वनस्पते ॥

सततं वरुणो रक्षेत् त्वामाराद्वृष्टिराश्रयेत् ।
परितस्त्वां निषेवन्तां तृणानि सुखमस्तु ते ॥

अक्षिस्पन्दं भुजस्पन्दं दुःस्वप्नं दुर्विचिन्तनम् ।
शत्रूणां च समुत्थानं ह्यश्वत्थ शमय प्रभो ॥

अश्वत्थाय वरेण्याय सर्वैश्वर्य प्रदायिने ।
नमो दुःस्वप्ननाशाय सुस्वप्नफलदायिने ॥

मूलतो ब्रह्मरूपाय मध्यतो विष्णु रूपिणे ।
अग्रतः शिवरूपाय वृक्षराजाय ते नमः ॥

यं दृष्ट्वा मुच्यते रोगैः स्पृष्ट्वा पापैः प्रमुच्यते ।

यदाश्रयाच्चिरञ्जीवी तमश्वत्थं नमाम्यहम् ॥

अश्वत्थ सुमहाभाग सुभग प्रियदर्शन ।
इष्टकामांश्च मे देहि शत्रुभ्यस्तु पराभवम् ॥

आयुः प्रजां धनं धान्यं सौभाग्यं सर्वसम्पदम् ।
देहि देव महावृक्ष त्वामहं शरणं गतः ॥

ऋग्यजुःसाममन्त्रात्मा सर्वरूपी परात्परः ।
अश्वत्थो वेदमूलोऽसावृषिभिः प्रोच्यते सदा ॥

ब्रह्महा गुरुहा चैव दरिद्रो व्याधिपीडितः ।
आवृत्य लक्षसंख्यं तत् स्तोत्रमेतत् सुखी भवेत् ॥

ब्रह्मचारी हविष्याशी त्वदःशायी जितेन्द्रियः ।
पपोपहतचित्तोऽपि व्रतमेतत् समाचरेत् ॥

एकाहस्तं द्विहस्तं वा कुर्याद्गोमयलेपनम् ।
अर्चेत् पुरुषसूक्तेन प्रणवेन विशेषतः ॥

मौनी प्रदक्षिणं कुर्यात् प्रागुक्तफलभाग्भवेत् ।
विष्णोर्नामसहस्रेण ह्यच्युतस्यापि कीर्तनात् ॥

पदे पदान्तरं गत्वा करचेष्टाविवर्जितः ।
वाचा स्तोत्रं मनो ध्याने चतुरङ्गं प्रदक्षिणम् ॥

अश्वत्थः स्थापितो येन तत्कुलं स्थापितं ततः ।
धनायुषां समृद्धिस्तु नरकात् तारयेत् पितृन् ॥

अश्वत्थमूलमाश्रित्य शाकान्नोदकदानतः ।
एकस्मिन् भोजिते विप्रे कोटिब्राह्मणभोजनम् ॥

अश्वत्थमूलमाश्रित्य जपहोमसुरार्चनात् ।
अक्षयं फलमाप्नोति ब्रह्मणो वचनं यथा ॥

एवमाश्वासितोऽश्वत्थः सदाश्वासाय कल्पते ।
यज्ञार्थं छेदितेऽश्वत्थे ह्यक्षयं स्वर्गमाप्नुयात् ॥

छिन्नो येन वृथाऽश्वत्थश्छेदिता पितृदेवताः ।
अश्वत्थः पूजितो यत्र पूजिताः सर्वदेवताः ॥

॥ इति अश्वत्थ स्तोत्रं सम्पूर्णम् ॥

अमावास्यायदापार्थ सोमवारयुताभवेत् ।
तस्यामश्वत्थ मागत्य पूजयेच्च जनार्दनम्।।
अष्टोत्तरशतं कुर्यात् तस्मिन् वृक्षे प्रदक्षिणम्।
व्रतराजमिदंराजन् विष्णोः प्रीतिकरं शुभम्।।

அமாவாஸ்யாயதாபார்த்த மவாரயுதாபவேத் ।
தஸ்யாமஶ்வத்த மாகத்ய பூஜயேச்ச ஜநார்தநம் ।।
அஷ்டோத்தர ஶதம் குர்யாத் தஸ்மிந் வ்ருக்ஷே ப்ரதக்ஷிணம் ।
வ்ரதராஜ மிதம் ராஜந் விஷ்ணோ: ப்ரீதிகரம் ஶுபம் ।।

எப்பொழுது அமாவாஸையானது திங்கட்கிழமையோடு கூடியதாக வருமோ அன்று அரச மரத்தடியில் ஜனார்த்தனர் என்கிற மஹாவிஷ்ணுவை பூஜிக்க வேண்டும் மேலும் அம்மரத்தை நூற்றியெட்டு முறை ப்ரதக்ஷிணம் செய்ய வேண்டும்.இது வ்ரதங்களுக்குள் தலையானதும் ஸ்ரீ மஹா விஷ்ணுவிற்கு ப்ரீதியை அளிக்கத் தக்கதும் ஶுபகரமானதுமான வ்ரதமாகும்.

அரச மரத்தை ப்ரதக்ஷிணம் செய்யும் பொழுது சொல்லவேண்டிய ஶ்லோகம்

मूलतो ब्रह्मरूपाय मध्यतो विष्णुरूपिणे।
अग्रत: शिवरूपाय वृक्षराजाय ते नम:।।
आयु: प्रजां धनं धान्यं सौभाग्यं सर्वसम्पदम्।
देहि देव महावृक्ष त्वामहं शरणं गत:।।

மூலதோ பிரம்ஹரூபாய, மத்யதோ விஷ்ணு ரூபிணே ।

அக்ரத: ஶிவ ரூபாய விருக்ஷ ராஜய தே  நம: ||

ஆயு: ப்ரஜாம் தநம் தாந்யம் ஸௌபாக்யம் ஸர்வஸம்பதம் |
தேஹிதேவ மஹாவ்ருக்க்ஷ த்வாமஹம் ஶரணம் கத: ||